ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 14,925/4 – 1970 සැප්තැම්බර් 30 වැනි බදාදා — 1970.9.30

14,925/4 ம் இலக்கம் — 1970 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச. வ.—பீ/49/50

### காணி கொள்ளல் சட்டம்

#### 49 (அ) (1) ஆம் பிரிவின் கீழ்க் கட்டளை

1964 இன் 28 ஆம் இல. சட்டத்தால் திருத்தப்பட்டவாருன (460 ஆம் அத்தியாயமான) காணி கொள்ளல் சட்டத்தின் 49 (அ) (1) ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கபட்ட தத்துவத்தின் பண்பால் பதில் நிதி அமைச்சர் பேனூட் சொய்சா ஆகிய நான் இதனகத்துள்ள அட்டவணையில் குறிப்பிடப் பட்டுள்ள காணியானது (399 ஆம் அத்தியாயமான) இலங்கைச் சேமிப்பு வங்கிக் கட்டளைச் சட்டத்தினுல் தாபிக்கப்பட்ட ஓர் அரசாங்க கூட்டுத்தாபன மாகிய இலங்கைச் சேமிப்பு வங்கியினது அலுவலகத்தை நிறுவும் பொருட்டு தேவைப்படுகிறதெனப் பிரகடனஞ் செய்கின்றேன்.

கொழும்பு,
1970 ம் ஆண்டு செப்தெம்பர் மீ 25 ந் உ.

பேனூட் சொய்சா,
பதில் நிதி அமைச்சர்.

அட்டவணை

கொழும்பு மாவட்டத்தில் கொழும்பு மாநகர சபையின் நிருவாக எல்லைக்குள், வடகிழக்கு எல்லையாக இப்பொழுது இலங்கைச் சேமிப்பு வங்கிக்குச் சொந்தமான காணியையும், தென்கிழக்கெல்லையாக சுதேப்பின்ஸ் வீதியையும், வடமேற்கெல்லையாகவும் தென்மேற்கெல்லையாகவும் 64.12.1 இன் பட இல. 1253/1964 கொண்ட 2 ஆம் துண்டையும் (பகுதி) கொண்டதும் 30 பேர்ச்சு பரப்பளவுள்ள மெஸ்ஸர்சு கொழும்பு கொமேசல் கம்பனி லிமிரெட் தாபனத்தின் எல்லைக்குட்பட்டதும் கட்டிடத் திணைக்கள பிரதான கட்டிடக் கலைஞரால் 1969, திசெம்பர் மாதம் 12 ஆந் தேதியிடப் பட்ட படத்தில் நீல நிறம் பூசப்பட்ட சொரியலான அப்பகுதியாவும்.

10-265

---

ச. வ.—பீ. 9/67

### 1967 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, அரிசி மானியவரிச் சட்டம்

#### 3 (1) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

1967 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, அரிசி மானிய வரிச் சட்டத்தின் 3 (1) ஆம் பிரிவினுல் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு, பதில் நிதி அமைச்சர் பேனூட் சொய்சா ஆகிய யான், அரிசி மானிய வரியானது, ஆள் ஒருவர் (171 ஆம் அத்தியாயமான) உணவுக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழாக்கப்பட்ட ஒழுங்கு விதிகளின் கீழ் தமது கிழமைக்கான பங்கீடாகப் பெற உரிமையுடையவராயிருக்கும் சந்தர்ப்பத்துக்கேற்ப, நான்கு அவருபோய் இருத்தல் அரிசி அல்லது எட்டு அவருபோய் இருத்தல் நெல் அளவு ஒன்றுக்கு ஒரு ரூபா இருபத்தைந்து சத வீதத்தில் 1970 ஆம் ஆண்டு ஒக்டோபர் 1 ஆம் தேதியிலிருந்து கணிக்கப்பட வேண்டுமென இவ்வறிவித்தல் மூலம் தீர்மானிக்கின்றேன்.

பேனூட் சொய்சா,
பதில் நிதி அமைச்சர்.

கொழும்பு, 28 செப்டெம்பர் 1970.

10-275